# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயா் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை– 600 018. தொலைபேசி எண்: 24347590

**ஆணை நாள்: – 03.02.2015**

**முன்னிலை**

**திரு. எஸ்.எஃப். அக்பர், பி.எஸ்சி., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்.**

**வழக்கு எண். 2594/மறு விசாரணை /F/2013 (31069/F/2013)**

திரு. ஏ.பொன்னுராஜ், .. மேல்முறையீட்டாளர்
எண்.108, நேத்தாஜி தெரு,
புல்லரம்பாக்கம் கிராமம் அஞ்சல்,
திருவள்ளூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/செயற்பொறியாளர் .. பொது அதிகார அமைப்பு
(இயக்கம் மற்றும் பராமரிப்பு),
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக்
கழகம், திருவள்ளூர், திருவள்ளூர் மாவட்டம்.

*****

**ஆணை**

இன்றைய (03–02–2015) விசாரணைக்கு, மனுதாரர் திரு.ஏ.பொன்னுராஜ் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறைகள்) விதி 7ன்படி மேல்முறையீட்டாளர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, திரு.பி.குமார், உதவி பொறியாளர் (வடக்கு), தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், திருவள்ளூர் அவர்கள் ஆஜரானார்.

2. இந்த வழக்கு குறித்த விசாரணையானது, ஏற்கனவே 05.11.2012 அன்று இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணையின் தொடர்ச்சியாக, இன்று நடைபெறும் மறுவிசாரணையாகும்.

**3.** ஆணையத்தின் **26.11.2012**ஆம் நாளிட்ட உத்தரவில்,

“விசாரணையில், பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கேட்ட ஆவணங்கள் **1999**ஆம் ஆண்டிற்கானது என்றும், **13** ஆண்டுகள் கடந்த நிலையில், மனுதாரர் குறிப்பிட்ட கோப்புகள் கிடைக்கப் பெறவில்லை என்ற தகவல் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது. மனுதாரர் கோரியுள்ள ஆவணங்கள் அடங்கிய கோப்புகள் நிரந்தரமாகப் பராமரிக்கப்பட வேண்டிய கோப்புகள் ஆகும். இந்நிலையில், பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கேட்கும் தகவல்கள் இல்லையென்று கூறுவது ஏற்கத்தக்கது அல்ல. மனுதாரர் கோரியுள்ள தகவல்களைத் தேடி ஒரு மாத காலத்திற்குள் மனுதாரருக்கு அளித்து, அளிக்கப்பட்ட விவரத்தை அத்தாட்சியுடன் இவ்வாணையத்தின் முன்பு சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.’’

– எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4.** இந்நிலையில், மனுதாரர் **10.01.2013**ஆம் நாளிட்டு ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ள மனுவில் ஆணையம் உத்தரவு பிறப்பித்தும், இதுகாறும் தமக்கு தகவல்கள் வழங்கவில்லை எனக் கூறி புகார் தெரிவித்துள்ளார். அப்புகார் மனுவானது இன்றைய விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் ஆஜராகாத சூழ்நிலையில் பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தின் மேற்காணும் உத்தரவிற்கிணங்க, செயற்பொறியாளர், இயக்கம் மற்றும் பராமரிப்பு, திருவள்ளூர் அவர்களின் கடித நாள் **02.01.2013** வாயிலாக புல்லரம்பாக்கம் கிராமம், மின் இணைப்பு எண்.**317**, திருமதி மின்னலா, க/பெ. உத்திரமணி அவர்களிடமிருந்து மின் இணைப்பு வழங்குவதற்காக பெறப்பட்ட விக்கிரைய பத்திர நகல், வீட்டுவரி ரசீது, திருமதி மின்னலா, க/பெ.உத்திரமணி என்பவர் பெயரில் உள்ளதற்கான ரசீது நகல், திருமதி மின்னலா அவர்களுக்கு மனுதாரர் ஏ.பொன்ராஜ் எழுதிக்கொடுத்த விக்கிரையப் பத்திரம் ஆகியவற்றை மனுதாரருக்கு சார்வு செய்ததாகத் தெரிவித்து அதற்கான அறிக்கையை இன்றைய விசாரணையில் பொதுத் தகவல் அலுவலர் சமர்ப்பித்திருக்கிறார். அதனை ஆணையம் பதிவு செய்கிறது.

**5.** புதிதாக வனையப்பட்டுள்ள தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு) விதிகள், **2012**, விதி **7**–ன்படி, மனுதாரர் இவ்வாணையத்தின் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயத் தேவை. அழைப்பாணை அனுப்பியும் மேல்முறையீட்டாளர் இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. தான் விசாரணைக்கு ஆஜராகாததற்கான காரணங்களை விளக்கி விசாரணை தேதிக்கு முன்பாக இவ்வாணையத்திற்குக் கடிதமும் அனுப்பவில்லை. ஆனால் பொது அதிகார அமைப்பினர் அனைத்து ஆவணங்களுடன் தங்களது அன்றாட அலுவல்களை ஒத்திவைத்துவிட்டு, இன்றைய விசாரணையில் கலந்து கொண்டு, தங்கள் தரப்பு வாதத்தை முன்வைத்துள்ளனர். ஆனால் மேல்முறையீட்டாளர் தனது தரப்பு வாதங்களை எடுத்துரைக்க இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. மேலும், அவருக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் போதுமானவையா, சரியானவையா – என்னென்ன தகவல்கள் திருப்திகரமாக இல்லை –

என்னென்ன இனங்களுக்கு அரைகுறையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன என்பன போன்ற அம்சங்களை ஆராய்வதற்கு ஏதுவாக இருக்கும் வகையில், இன்றைய விசாரணைக்கு அவர் கண்டிப்பாக வந்திருக்க வேண்டும். அவர் வராததால், அது இயலாமல் போய்விட்டது. அவருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் திருப்திகரமாக இருக்கும் என்றே இதனைக் கருத வேண்டியுள்ளது. இனி வருங்காலங்களில், ஆணையத்திலிருந்து விசாரணைக்கு அழைப்பாணை அனுப்பப்படும்போது, விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்று மேல்முறையீட்டாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. ஆக, இந்த வழக்கைப் பொறுத்த வரையில், விசாரணையின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும், மனுதாரருக்கு அவர் கோரிய அனைத்து இனங்களுக்கான தகவல்களும் வழங்கப்பட்டுள்ள நிலையில், இம்மேல்முறையீட்டில் மேலும் பரிசீலனை செய்ய வேண்டிய வேறு அம்சங்கள் எதுவும் இல்லை எனக் கருதி, இந்த மேல்முறையீடு இத்துடன் முடித்து வைக்கப்படுகிறது.

**ஒம்/— (எஸ்.எஃப். அக்பர்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். 2594/மறு விசாரணை /F/2013 (31069/F/2013)</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு :—</u>**

பொதுத் தகவல் அலுவலர்/செயற்பொறியாளர்
(இயக்கம் மற்றும் பராமரிப்பு),
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
திருவள்ளூர், திருவள்ளூர் மாவட்டம்.

**<u>மனுதாரர் :-</u>**

திரு. ஏ.பொன்னுராஜ்,
எண்.108, நேத்தாஜி தெரு,
புல்லரம்பாக்கம் கிராமம் அஞ்சல்,
திருவள்ளூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.
jb/ps